**ஹபுதளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூன் 30 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து, ஹபுதளை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

இறுதி இருப்புக்களை மதிப்பிடுவதற்கான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 463,854 தொகையான முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணங்களிலிருந்தான வருமானம் ரூபா 637,306 ஆல் குறைத்துக் காட்டுவதன் மூலம் பற்றுச்சீட்டிடப்பட்டிருந்தது.

(இ) இறைச்சி கடைகளிலிருந்து அறவிட வேண்டிய மீளாய்வாண்டிற்கான ரூபா 205,405 தொகையான வாடகை வருமானத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்காக வியாபார கடைகளிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 25,824 தொகையான வாடகை வருமானத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டுடன் தொடர்புடைய ரூபா 32,980 நிலுவையாகவுள்ள முத்திரைக் கட்டணங்களிற்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 12,713,526 ஆகவிருந்த அதேநேரம் அத்திகதியிலுள்ளவாறான செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 11,624,835 ஆகவிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 75,829,579 பெறுமதியான சொத்து விடயமொன்று தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையால் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 132(ஏ) பிரிவு மற்றும் (ஒ) பிரிவு | ரூபா 90,343 கூட்டுத்தொகையான செலவீனத்திற்கான அனுமதி 07 சந்தர்ப்பங்களில் உரிய அமைச்சிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 134(1) ஆம் பிரிவு | வீதங்கள் மற்றும் வரிகளானது ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு தடவை நகர முடியாத சொத்துக்களை மதிப்பிடுவதன் மூலம் வருடாந்த பெறுமதி மீது அறவிடுவதற்குப் பதிலாக 2002 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்டது. |
| (ஆ) 1988 இன் பிரதேச சபையின் (நிதி நிர்வாகம்) விதிகளின் 177 ஆம் இலக்க விதி | பதினைந்து வியாபார கடைகள் விலைமனு கோராமல் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 55,314 கூட்டுத்தொகையான 04 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 181 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 781,763 பெறுமதியில் 02 ஆண்டுகளிற்கு மேலாக ஏற்பட்ட காலங்கடந்த வைப்புக்களானது அகற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் மற்றும் 4 ஆம் பிரிவுகள் | வேலை மாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் வேலையை விட்டுச்சென்ற 11 ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 50,012 உத்தியோகத்தர் கடனின் நிலுவைகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட 1980 திசெம்பர் 31 இன் 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு வியாபார கடைக்கான மாதாந்த வாடகையானது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் 62 வியாபார கடைகள் தொடர்பான 257,122 கூட்டுத்தொகையான மாதாந்த வாடகை வருமானம் அதற்கேற்ப மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய 2361 ஆம் இலக்க வர்த்தமானி | சபையின் அதிகாரப்பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட எட்டு நிலைமாற்று கோபுரங்களிற்கான ரூபா 24,000 கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன் அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,598,636 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 13,341,259 ஆகவிருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பான சபையின் நிதியத்திற்கு வருமதியாகவுள்ள வருமானம் ரூபா 1,288,078 ஆகவிருந்ததுடன் பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானத்தில், 50 சதவீதத்திற்கு கமனான தொகையொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்தது.

(ஆ) 2012 இற்கு பின்னர், தற்போதுள்ள வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய வருமான மூலங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக மாகாண பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 3,715,229 ஆகவிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறமையீன்மைகள்

26 நிரந்தர ஊழியர்களை அலுவலக வேலைகளில் வேலைக்கமர்த்ததாமையால் களத்தில் வேலை செய்வதற்காக 2016 இல் 17 அமைய மற்றும் தற்காலிக அடிப்படையிலான ஊழியர்களுக்கு ரூபா 2,775,199 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.2 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 1,345,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட சபைக்கு சொந்தமான 02 பயன்படுத்தப்படாத வாகனங்களை திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ) ஹபுதளை பிரதேச சபையின் சுடுகாட்டினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தகாரருக்கு மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் உள்ளூராட்சி சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,952,705 முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்தச் செயற்திட்டமானது மாகாணத்தின் அமைச்சர் சபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தகாரர்களால்

மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக செலுத்தப்பட்ட ரூபா 106,433 தொகைகள் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உறுப்பினர்களின் அலுவலக காலப்பகுதி கடந்திருந்த போதும், மே மாதத்திற்கான மொத்த உறுப்பினர் தலைவர் உட்பட 11 உறுப்பினர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ரூபா 81,000 மேலதிக கொடுப்பளவை அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவீன முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டின் போது வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) நிர்மாணங்கள் மீதான கட்டுப்பாடு
(இ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) வருமானம் மீதான கட்டுப்பாடு
(ஊ) வாகனங்கள் மீதான கட்டுப்பாடு
(எ) செலவினக் கட்டுப்பாடு
(ஏ) கணக்கீடு